மனனம் செய்ய
இந்த வார வசனம்:

**இப்படிப்பட்டவர்களைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்பது மோசே நமக்குக் கொடுத்த திருச்சட்டத்திலுள்ள கட்டளை. நீர் என்ன சொல்கிறீர்.**

(யோவான் 8:5)

நம் குழந்தைகளுக்கு கடவுளின் கட்டளைகளை மீறக்கூடாது என்று கற்பிக்கிறோம் நம்மில் பெரும்பாலானோருக்கு நம்முடைய தோல்விகளைப் பட்டியலிடுவது கடினமானதல்ல. நம்முடைய வாழ்க்கையும், மற்றும் நாம் அதைப் பார்க்கும்விதமும் நம்முடைய பாவங்கள் மற்றும் தோல்விகளால் வரையறுக்கப்படுகிறது. பரிசேயர்கள் விபசாரம் செய்த பெண்ணைப் பார்த்து, “இப்படிப்பட்டவர்களை” என்று குறிப்பிடுவது போல, நாமும் நம்மையே சுட்டிக்காட்டி, என்னைப் போன்ற ஒருவர் அன்பு செய்யத் தகுதியற்றவர் என்று கூறுகிறோம். சட்டத்தைக் கடைப்பிடிக்கத் தவறியதை மட்டும் காணும்போது நம்மைக் காணும் கடவுளின் பார்வையை நாம் இழந்துவிடுகிறோம்.

அவருடைய சட்டங்களை மட்டுமே கடைப்பிடிப்பதற்காக கடவுள் நம்மை படைக்கவில்லை. அவர் நம்மைப் பார்க்கும்போது நம்மிடம் உள்ள குறைகளைப் பார்ப்பதில்லை. நம்மிலிருக்கும் அழகு என்னவாக இருக்கமுடியும் என்று பார்க்கின்றார். அவரைப் பொறுத்தவரை, நாம் அனைவரும் ஒரு தலைசிறந்த படைப்பு, நாம் யாரென்றும், நம்முடைய ஒளி பிரகாசிக்கப்படவும், அறியப்படவும், அவர் காத்திருக்கின்றார்.

நம்மைப் படைத்தவர் நம்மை அவருடைய சாயலாகப் படைத்து, நம் வாழ்வை உறுதிப்படுத்துகின்றார். ஏனென்றால், கடந்த காலத்தில் நாம் எந்தவிதமான தவறுகளைச் செய்து வாழ்க்கையை குழப்பத்தில் ஆழ்த்தியிருந்தாலும் அவை அனைத்தையும் புதிதாக மாற்றி வாழ்வை அழகாக்குகின்றார். இருப்பினும் நாம் செயலற்றவர்கள் அல்ல, ஆனாலும் நாம் அனைவரும் அவரின் சொந்தமான, அதிலும் தலைசிறந்த படைப்புகள். ” நீர் போகலாம், இனி பாவம் செய்யாதீர்” என்று இயேசு சொன்னபோது, நாம் தேர்ந்தெடுக்கும் முடிவுகளே, நாம் என்னவாக இருக்கப்போகிறோம் என்பதை முடிவு செய்கின்றன என்பதை நமக்கு நினைவூட்டுகின்றன. மற்றும் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய சொந்த வழிகளில் சரியானவர்களாக இருக்க ஒவ்வொரு நாளும் போராடுகிறோம். நம்முடைய வாழ்க்கையில் ஒருவரையொருவரின் குறைகளைச் சுட்டிக்காட்டுவதற்குப் பதிலாக, ஒருவருக்கொருவர் உதவிசெய்து ஊக்கப்படுத்தி, கடவுளுக்கு ஏற்றவாறு வாழ்வதே கடவுளுக்குப் பிரியமான வாழ்வாகும்.

எனவே, நீங்கள் செய்யும் பாவங்களோ அல்லது நீங்கள் சுமக்கும் சுமைகளோ முக்கியமல்ல;. சட்டத்தின் கண்களால் அல்ல; அவரின் சொந்தக் கண்களால் கடவுள் நம்மைப் பார்க்கின்றார்; அவரைப் பார்க்க உங்களை அழைக்கின்றார், என்பதே முக்கியம். இன்றைய முதல் இரண்டு வாசகங்களும் இவ்வாறு நம்மை சிந்திக்க அழைக்கின்றன. கடந்த கால நிகழ்வுகளை நாம் நினைக்கத்தேவையில்லை. மாறாக, நம் வாழ்வை முன்னோக்கி நகர்த்த, அவர் உருவாக்கவிருக்கும் கனவை உங்களுடன் பகிர்ந்துகொள்ள அவர் நம்மை அழைக்கிறார்.

**இன்றைய வாசகங்கள்:**

இச: 43: 16-21;
திபா: 126; 1-6;
பிலிப்பியர்: 3: 8-14;
யோவான்: 8:1-11.

INTERNAL CIRCULATION ONLY
BUL 14/2022
Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

3 ஏப்ரல் 2022

Newbec
NEW WAY OF BEING CHURCH
தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:
**உலக படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க தினம் (ஏப்ரல் 21)**

# கடந்த காலத்திலிருந்து விடுபடுங்கள்



இன்றைய நற்செய்தியில் நாம் இவ்வாறு வாசிக்கிறோம். பரிசேயர்கள் இயேசுவிடம் வந்து, “இப்பெண் விபசாரத்தில் கையும் மெய்யுமாகப் பிடிபட்டவள், இப்படிப்பட்டவர்களைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்பது மோசே நமக்குக் கொடுத்த திருச்சட்டத்திலுள்ள கட்டளை” என்று கூறுகிறார்கள். இன்றைய சமூக நிலைப்பாடுகளின்படி, இது கொடூரமானதாக தோன்றினாலும், அவர்களின் அணுகுமுறை அசாதாரணமானது அல்ல.